DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE PRINICPAL DISTRICT AND SESSIONS JUDGE, PRINICPAL DISTRICT AND SESSIONS COURT, DINDIGUL.
--

| | |
|---|---|
| Calendar | : |
| Miscellaneous | :O.S. 177/2018 |
| Sessions | : |
| Preliminary Register | : |
| Deposition of Witness for | :P.W.1 |
| Name | :Kala |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 27.06.2022

முதல் விசாரணை:- நிரூபண வாக்குமூலம் தாக்கல். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 27.08.1992 ம் தேதி 1 ம் பிரதிவாதி பெயரில் 1 வது அயிட்டச் சொத்தினை கிரையம் பெற்றதற்கான சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதசாஆ.1 ஆக குறியிடப்படுகிறது. (இதனுடைய அசல் 1 ம் பிரதிவாதி வசம் உள்ளது). 31.8.1992 ம் தேதியிட்ட 5 ம் பிரதிவாதி பெயருக்கு 1 வது அயிட்டச் சொத்து கிரையம் செய்யப்பட்டதற்கான சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதசாஆ.2 ஆக குறியிடப்படுகிறது. 18.5.2005 தேதியில் 1 ம் பிரதிவாதி 2 வது அயிட்டச் சொத்தை பொறுத்து 7 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வாதசாஆ.3 ஆக குறியிடப்படுகிறது. 7.9.2018 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள நில உரிமை விவரங்கள் வருவாய்த்துறை தமிழக அரசால் அளிக்கப்பட்ட பட்டா எண்.1015 பதிவிறக்கம் செய்யப்பட்டதை தாக்கல் செய்கிறேன். அது வாதசாஆ.4 ஆக குறியிடப்படுகிறது. 7.9.2018 தேதியில் பட்டா எண்.315 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள நில உரிமை விவரங்கள் வருவாய்த்துறை தமிழக அரசால் அளிக்கப்பட்ட பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்டதை தாக்கல் செய்கிறேன். அது வாதசாஆ.5 ஆக குறியிடப்படுகிறது.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

V R LATHA
Digitally signed by V R LATHA
Date: 2022.06.28 15:56:56 +0530

Prl.Sessions Judge,
Dindigul.